செ.கு. எண் :- 406 நாள் :- 14.11.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 14.11.2012

**பாபநாசம், சேர்வலாா் மற்றும் மணிமுத்தாறு** நீர்த்தேக்கங்களிலிருந்து திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள நேரடி மற்றும் மறைமுகப் பாசனப் பகுதிகளுக்கு பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடுமாறு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **15.11.2012 முதல்** பாபநாசம், சேர்வலாா் மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து **137 நாட்களுக்கு** தாமிரபரணி பாசன அமைப்பிலுள்ள நேரடி மற்றும் மறைமுகப் பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள **86,107 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநா.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9